DEICHMANN

DEICHMANN

# நடத்தை விதிமுறைகள்

இந்த டெயிச்மான் நடத்தை விதி தொகுப்பு பிஎஸ்சிஜ நடத்தை விதி தொகுப்பு, பதிப்பு 1/2014-ஐ உள்ளடக்கியதாகும். டெயிச்மான் குழுமம் பிஎஸ்சிஜ நடத்தை விதி தொகுப்பை அங்கீகரிக்கிறது மற்றும் பிஎஸ்சிஜ தொடருக்கு நல்ல விதத்தில் பங்களிக்க தனது சொந்த வடிவமைப்பை பயன்படுத்தியுள்ளது

# முகவுரை

டெயிச்மான் குழுமத்தைச் சார்ந்த நாங்கள், எங்களுடைய உலகளாவிய செயல்பாடுகளில் சமுதாய ஏற்புடைமை மற்றும் சுற்றுச்சூழல் நட்பு நிலை ஆகியவற்றின் பொறுப்புக்கு கடமைப் பட்டுள்ளோம். எங்களின் டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும், எமது பணியாளர்கள் மற்றும் மற்ற தரப்பினர்கள் ஆகியோருக்கு எங்களுடைய நிலையை விளக்கும் வகையில் இந்த டெயிச்மான் நடத்தை விதி தொகுப்பை (பதிப்பு 2016) உருவாக்கியுள்ளோம். டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்கும் இடமின்றி இந்த நடத்தை விதி தொகுப்பை பின்பற்ற வேண்டும் என்பது எங்களுக்கு முக்கியமாகும்.

இந்த டெயிச்மான் நடத்தை விதி தொகுப்பு வர்த்தக சமுதாய இணக்க முனைப்பின் (பிஎஸ்சிஜ) சமீபத்திய கோட்பாடுகளை பின்பற்றுகிறது. எங்களுக்கு பொருட்கள் விநியோக சங்கிலியின் பணி நிலைகளின் மேம்பாட்டிற்கு இன்றியமையாத, உலக மனித உரிமைகள் பிரகடனம், குழந்தைகளின் உரிமைகள் மற்றும் வர்த்தக கோட்பாடுகளுக்கான வழிகாட்டுதல்கள், யுஎன் வர்த்தக கோட்பாடுகளுக்கான வழிகாட்டுதல் மற்றும் மனித உரிமைகள், ஓஇசிடி வழிகாட்டுதல் கோட்பாடுகள், யுஎன் மற்றும் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் மரபு (ஐஎல்ஒ) மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த விதி தொகுப்பு அமைந்துள்ளது.
இந்த டெயிச்மான் நடத்தை விதி தொகுப்புடன், நாங்கள் எங்களின் டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்கள் ஆகியோருடனான நெருக்கமான ஒத்துழைப்புடன் எங்களுடைய கோட்பாடுகளை அறிமுகப்படுத்தி, மேலும் மேம்படுத்தவுள்ளோம். இது நிறைவேற்றப்படவில்லை என்றாலும், வர்த்தக உறவை உடனே முடித்துக்கொள்ளமாட்டோம்.

அனைத்து டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் தங்களுடைய ஒவ்வொரு செயல்பாட்டிலும் இந்த ஆவணத்தில் வகுத்துரைக்கப்பட்ட கோட்பாடுகளை பின்பற்ற வேண்டும் என்பதே எங்களுடைய அடிப்படை விதிமுறை ஆகும். எங்களுடைய கோட்பாடுகளில் ஏதேனும் ஒன்று ஒரு நாட்டினுடைய அல்லது ஒரு பகுதியினுடய சட்டங்களுக்கு குறைவாக அமைந்திருப்பின், தேசிய சட்டங்களும் மற்றும் அத்தகைய உயர் நிலைகளும் பொருந்தும். அத்தகைய நிகழ்வில், டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகள் ஏதாவது சட்ட ஒதுக்கீடுகள் அல்லது விதிமுறைகள் சட்டத்திற்கு அப்பாற்பட்டு இருந்தால் டெயிச்மான் குழுமத்திற்கு அது பற்றி உடனே தெரிவித்து மற்றும் அதற்கான அதிகப்படியான நிலைகளுக்கு வழி வகை செய்து அவை செல்லுபடியாகாதவாறு ஆகாமல் இணக்கமாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.



ஹென்ரிச் ஒ. டெயிச்மான், இயக்குனர்கள் குழுமம் மற்றும் செயல் இயக்குனர்களின் தலைவர்

ஒரு "டெயிச்மான் வர்த்தக கூட்டாளி" என்பவர் ஒரு உற்பத்தி தயாரிப்பு, செயல் முறை அல்லது சேவைக்கு பொறுப்புடைய ஒப்பந்தப்படியிலான பங்காளி மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள நிலைப்பாட்டினால் சமூக தரநிலைகளுக்கு ஒத்திருப்பதை உறுதி செய்யக்கூடியவர். இந்த வரையறை உற்பத்தியாளர்கள், வினியோகஸ்தர்கள், இறக்குமதியாளர்கள், ஒன்றிணைப்பாளர்கள், சேவை அளிப்பவர்கள் போன்ற அனைவருக்கும் பொருந்தும்.

ஒரு "துணை-ஒப்பந்தக்காரர்" என்பவர் விநியோகஸ்தர் செய்யும் உற்பத்தியிலோ அல்லது வழங்கும் சேவையிலோ உபயோகப்படுத்தும் பொருட்களையோ அல்லது சேவையையோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்கும் விநியோக சங்கிலியில் ஒரு பொருளாதார உட்பொருள். எனவே, அந்த வகையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்.

## 1. பணியாளர்கள் பங்கேற்பு மற்றும் பாதுகாப்பு

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் அவர்களுடைய பணியாளர்கள் பணி தொடர்பான விஷயங்களைப் பற்றிய தகவல்கள் பரிமாற்றத்தில் பங்கேற்க ஏதுவாக, நிரூபிக்கப்பட்ட மேலாண்மை நடைமுறைகளை செயல்படுத்த வேண்டும். டெயிச்மான் நடத்தை விதி தொகுப்பின் நோக்கங்களுக்கு ஏற்ப பணியாளர்கள் பாதுகாப்புக்கு தேவையான நடவடிக்கைகளை அவர்கள் அனுமதிக்க வேண்டும். பணியாளர்களுக்கு அவர்களுடைய உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய தகவலளிக்க குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மேலும், டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் அவர்களுடைய செயல் நிர்வாகிகள், பணியாளர்கள் மற்றும் பணியாளர் பிரதிநிதிகள் ஆகியோர் வர்த்தகசெயல்பாடுகளில் வெற்றிகரமாக பதிக்கும் அளவுக்கு அவர்களுடைய திறமைகளை வளர்த்துக்கொள்ள பொறுப்பேற்க வேண்டும். இதற்கு தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அனைத்து செயல்பாட்டு நிலைகளிலும் மேம்பட்ட பயிற்சி, குறிப்பாக தொழில் தொடர்பான பாதுகாப்பு முறைகளில் தேவைப்படும்.

தனிப்பட்ட வர்த்தகங்களில், டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் தனிப்பட்டவர்களுக்கும் மற்றும் குழுமங்களுக்கும் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடிய புகார் வழிமுறைகளை செயல்திறன் மிக்கதாக நிர்மாணிக்க வேண்டும் அல்லது அவற்றில் பங்கேற்க வேண்டும். செயல்திறன் மிக்க சிறப்பான சட்ட முறைமைகள் இருக்கும் இடங்களில் கூட, புகார் வழிமுறைகள் குறிப்பாக பயனுடையதாக இருக்க வேண்டும், எ.கா., நம்பத்தகுந்த நபருக்கான துரித அணுகலை அமைத்துக்கொடுப்பது, எந்த குறைகளுக்கும் உடனடி தீர்வு, குறைவான செலவுகள் மற்றும் பல்வேறு நாடுகளைச் சென்றடையக் கூடியது.

## 2. குழந்தைத் தொழிலாளர் முறை மற்றும் இளைஞர்களின் பாதுகாப்பு

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மூலமாக செய்யப்பட்ட எந்த பணியும் குழந்தைத் தொழிலாளர் முறையாகும். உள்ளூர் சட்டங்கள் அதிகமான குறைந்தபட்ச வயதையோ அல்லது கட்டாயமான நீண்ட பள்ளிக்கூட படிப்பையோ நிர்ணயித்திருந்தால், அத்தகைய அதிகப்படியான வயதே பொருந்தும். எனினும், சர்வதேச தொழிலாளர் மாநாடு 138 (ஐஎல்ஒ மாநாடு 138) நிர்ணயம் செய்தபடி வளர்ந்து வரும் நாடுகளுக்கு விதிவிலக்காக சட்டப்படியான குறைந்த வயது 14 ஆக இருப்பின், அத்தகைய குறைந்த வயது பொருந்தும்.

மேலே குறிப்பிட்ட குழந்தை வயதினரைவிட மூத்தவர்கள் மற்றும் 18 வயதுக்குட்பட்டவர்கள், "வளர் இளம் பருவ பணியாளர்கள்" எனப்படுவர்.

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பணியில் உபயோகப்படுத்தவோ அல்லது ஒத்துக்கொள்ளவோ கூடாது. அவர்கள் பணியாளர்களை குறைவாகவோ அல்லது தாழ்வாகவோ ஒருபோதும் நடத்தாத பொருத்தமான வயது நிர்ணயம் செய்யும் வழிமுறைகளை கொண்ட ஆள் சேர்ப்பு செயல்முறையை கையாள ஒப்புக்கொள்கின்றனர்.
மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி குழந்தை தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கும் நிகழ்வில், டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் அத்தகைய குழந்தைகளின் பாதுகாப்பு, உடல் நிலை, கல்வி மற்றும் மேம்பாடு ஆகியவற்றை உறுதி செய்ய வழிமுறைகள் மற்றும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தி, ஆவணப்படுத்தி அவர்களுடைய பணியாளர்கள் மற்றும் இதர ஈடுபாடுடைய தரப்பினருக்கு தெரிவிக்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி அத்தகைய குழந்தை தொழிலாளர்கள் வயது மேல் வரம்பை மீறும் வரை, அதாவது இனி அவர்கள் குழந்தை தொழிலாளர்கள் அல்ல என்ற

நிலை வரும் வரை, டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் அத்தகைய குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்கு செல்வதை அனுமதித்து உதவ வேண்டும்.

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும், ஐஎல்ஒ பரிந்துரை 146-க்கு உட்பட்ட உள்ளூர் கட்டாய பள்ளிக்கூட படிப்பு தேவைப்படும் அல்லது பள்ளிக்கு செல்லும் குழந்தைகளுக்கு கல்வி மேம்பாட்டை அளிக்கும் வழிமுறைகள் மற்றும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தி, ஆவணப்படுத்தி அவர்களுடைய பணியாளர்கள் மற்றும் இதர ஈடுபாடுடைய தரப்பினருக்கு தெரிவிக்க வேண்டும். எந்த குழந்தை அல்லது வளர் இளம் பருவ பணியாளரும் பள்ளி பாட நேரத்தில் பணிபுரிவதில்லை என்ற உத்தரவாதத்தையும் மற்றும் பணி நேரம், பள்ளி படிப்பு நேரம், பணி/ பள்ளி ஆகிய இடங்களுக்கு வீட்டிலிருந்து சென்று வர ஆகும் நேரம் அனைத்துமாக ஒரு நாளைக்கு 10 மணி நேரத்திற்கும் அதிகமாக இருக்கக்கூடாது என்பதையும் மேற்கூறிய நடவடிக்கைகள் உள்ளடக்கும்.

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் வளர் இளம் பருவ பணியாளர்கள் இரவு நேரத்தில் பணி புரிவதில்லை என்பதையும் மற்றும் பணியிடத்திற்கு வெளியே அவர்களை உடல் நலம், பாதுகாப்பு, ஒழுக்கம் மற்றும் உணர்வு அல்லது உடல் தொடர்பான இடர்களிலிருந்து பாதுகாப்பதையும் உறுதி செய்ய வேண்டும். வளர் இளம் பருவ பணியாளர்களுக்கு செயல் திறன் மிக்க புகார் வழிமுறைகள், பள்ளிக்கூட ஒழுங்கு முறைகள் மற்றும் தொழில் தொடர்பு பாதுகாப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கான அணுகலை நிறுவனங்கள் செய்து தர வேண்டும்.

## 3. கட்டாய உழைப்பு

ஒரு நபரை அவருடைய விருப்பத்திற்கு எதிராக தண்டனை அச்சுறுத்தல் மூலம் வேலையோ அல்லது சேவையோ செய்ய வைப்பது கட்டாய உழைப்பு ஆகும்.

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் கொத்தடிமை, பண்ணையடிமை முறை, மனித கடத்தல் அல்லது சிறை வைப்பது உள்ளிட்ட பலவந்த அல்லது கட்டாய தொழிலாளர் முறைகளை பயன் படுத்தவோ அல்லது பொறுத்துக் கொள்ளவோ கூடாது.

அத்தகைய முறைகளை பின்பற்றி தொழிலாளர்களை வைத்து வர்த்தகம் நடத்தி லாபம் ஈட்டினால், டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் குற்றத்திற்கு உடந்தையானவர்கள் என்ற குற்றச்சாட்டை பெறும் அபாயத்துக்குள்ளாவார்கள்.

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் ஆள் சேர்த்தலின்போது வைப்புத்தொகையோ அல்லது தனிப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்குமாறோ கேட்கக்கூடாது. பணியாளர்கள் எந்த நேரத்திலும் எவ்வித தொந்தரவும் இன்றி வேலையை விட்டு செல்லும் உரிமை உடையவர்கள். ஒரு நியாயமான கால அவகாச அறிவிப்பு கொடுத்துவிட்டு அவர்களுடைய பணி ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ளலாம்

## 4. ஒழுங்கு முறை நடவடிக்கை

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும், பணியாளர்கள் மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை, பாலியல் தாக்குதல்கள், உடல் ரீதியிலான தண்டனை, உணர்ச்சி அல்லது உடல் வற்புறுத்தல் மற்றும்/அல்லது வாய்மொழி வசவு ஆகியவற்றிற்கு உட்படுத்தப்படமாட்டார்கள் என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

தேவைப்படும் எந்த ஒழுங்கு நடவடிக்கையும் எழுத்துபூர்வமாக அறிவிக்கப்பட்டு மற்றும் வாய்மொழியாக தெளிவான, புரியும்படியான வார்த்தைகளால் பணியாளர்களுக்கு விளக்கப்பட வேண்டும்.

## 5. வேறுபடுத்துதல் (பாரபட்சமாக நடத்துதல்)

ஒருவருடைய (ஆண் அல்லது பெண்) பணி சேர்த்தல், சம்பளம், மேம்பட்ட பயிற்சி, பதவி உயர்வு, பதவி நீக்க அறிவிப்பு அல்லது ஓய்வு அறிவிப்பு தொடர்பான விஷயங்களில், டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் இனம், சாதி, பிறப்பு, சமூக அந்தஸ்து, தேசிய இனம், மதம், ஊனம், பாலினம், ஒரு கூட்டமைப்பின் அங்கத்தினர், அரசியல் தொடர்பு, குடும்ப தயவு அல்லது பாலினம் போன்றவை காரணமாக பாரபட்சம் காட்டக்கூடாது, அதை பொறுத்துக் கொள்ளவும் கூடாது

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் அவர்களுடைய பணியாளர்களை, அவர்களுடைய இனம், சமூக அந்தஸ்து, தேசிய இனம், மதம், ஊனம், பாலினம், பாலியல் அமைப்பு, ஒரு கூட்டமைப்பின் அங்கத்தினர், அரசியல் தொடர்பு சம்பந்தமான போதனைகள் அல்லது நடவடிக்கைகள் அல்லது தேவைகளை பூர்த்தி செய்தல் ஆகியவற்றை பின்பற்றும்போது அவர்களுடைய உரிமைக்கு பங்கம் விளைவிக்கக்கூடாது.

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும், சைகை காட்டுதல், வாய்மொழி வார்த்தைகள் அல்லது பாலின தாக்குதலை குறிக்கும் உடல் தொடர்பு, ஒரு மிரட்டல், வசவு அல்லது சுரண்டல் போன்ற நடத்தைகளை ஒரு போதும் பொறுத்துக்கொள்ளக்கூடாது.

பெண் பணியாளர்கள் பிரசவத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய பாதுகாப்புக்கு சட்டபூர்வமான உரிமையுடையவர்கள். பெண் பணியாளர்களை கருவுறல் காரணமாக பணி நீக்கம் செய்யக்கூடாது. உடல் நிலைக்கு அபாயம் உள்ள பணியிடங்களில் கருவுற்ற பெண்களை பணிக்கு அமர்த்தக்கூடாது.

## 6. நிலையற்ற பணி இருக்கக்கூடாது

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும், தங்களுடைய பணி நிலைமைகளின் நிலையற்ற தன்மை அல்லது ஊழியர்களுக்கு ஒரு சமூக அல்லது பொருளாதார இடர் ஏற்படுவதற்கு வழிவகுக்கக் கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும். அவர்கள் பெரும்பாலான பாதுகாப்பை வழங்கும் தேசிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள், நடைமுறைகள், பழக்க வழக்கங்கள் மற்றும் சர்வதேச தொழிலாளர் தரநிலைகளின் வரிசையில் உள்ள பணியின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் பணிகள் அனைத்தும் செய்யப்படுகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும்.

பணியை தொடங்கும் முன்னதாக, டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும், தங்களது உரிமைகள், கடமைகள் மற்றும் பணி நேரம், ஊதியம், விடுமுறை உரிமைகள், மகப்பேறு பாதுகாப்பு மற்றும் பணம் செலுத்துதல் விதிமுறைகள் போன்றவை உள்ளிட்ட பணி நிலைமைகள் ஆகியவை பற்றி ஊழியர்களுக்கு எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய தகவல்களை கிடைக்கச் செய்ய வேண்டும்.

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும், மனிதத்தன்மை நிறைந்த பணி நிலைமைகளை வழங்க வேண்டும். ஊழியர்களுக்கு, பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் போன்று அவர்கள் வகிக்கும் பங்கில், அதுவும் குறிப்பாக குடிபெயர்ந்து வந்த தொழிலாளர்களுக்கும் மற்றும் தங்களது இருப்பிடங்களில் குழந்தைகளை விட்டு விட்டு வரக் கூடிய நிலையில் உள்ள தற்காலிக தொழிலாளர்களுக்கும் ஆதரவளிப்பதை உள்ளடக்குகிறது

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும், சட்டத்தின் உண்மையான நோக்கத்திற்கு வேண்டுமென்றே மாறானதாக உள்ள ஒரு முறையில் பணி உறவுமுறையை பயன்ப-

டுத்தக் கூடாது. இது (அ) தகுதிகள் வழங்கும் அல்லது தொடர்ச்சியான பணிக்கான நோக்கம் இல்லாத பயிற்சி திட்டங்கள், (ஆ) பருவகால தற்காலிக பணி அல்லது கூலி வேலைகள்-இவை ஊழியர்களின் பாதுகாப்பை மறைகேடு செய்ய பயன்படுகின்றன என்றால்; மற்றும் (இ) உழைப்புக்கு-மட்டுமேயான ஒப்பந்தங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். கூடுதலாக பணி துணை-ஒப்பந்தம் செய்தல் ஊழியரின் உரிமைகள் எதையும் மறைகேடு செய்யக்கூடாது.

## 7. தகுந்த ஊதியம்

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும், ஒரு தரநிலையான பணி வாரத்திற்கு அளிக்கப்படும் ஊதியங்களும் சம்பளங்களும் குறைந்த பட்சம் சட்டபூர்வ தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் அல்லது அதற்கும் அதிகமாக இருந்தால் கூட்டு பேர பேச்சு வார்த்தை ஒப்பந்தங்களில் நிர்ணயிக்கப்பட்ட தொழிற்துறை தரநிலைகளுக்கு ஒப்ப உள்ளன என்பதையும் மற்றும் நியதிச்சட்ட சமூக நன்மைகள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதையும் உறுதி செய்ய வேண்டும். அளிக்கப்பட்ட ஊதியங்களும் சம்பளங்களும் ஊழியர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானவையாகவும், ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் ஒரு கௌரவமான வாழ்க்கை நடத்தவும் மற்றும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தாராளமாக செலவழிக்கக்கூடிய வருமானம் உள்ளதாகவும் இருக்க வேண்டும்.

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும், ஊதியங்கள், சம்பளங்கள் மற்றும் துணைப்பயன்கள் ஆகியவற்றின் துல்லியமான சேர்க்கை ஒரு வழக்கமான அடிப்படையில் வெளிப்படையானதாக செய்யப்படுகிறது என்பதை உறுதி செய்ய வேண்டும். சட்டம் அல்லது கூட்டு பேர பேச்சு வார்த்தை உடன்படிக்கைகளால் அனுமதிக்கப்பட்ட பிடித்தல்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. ஒழுங்குமுறை காரணமான பிடித்தல்கள் அனுமதிக்கப்பட மாட்டாது. ஊதியத்தின் நிலைமட்டம் ஊழியர்களின் தகுதி மற்றும் கல்வி நிலையை பிரதிபலிப்பதாகவும் மற்றும் வழக்கமான பணி நேரத்தை குறிப்பதாகவும் இருக்க வேண்டும்.

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் சேர்ந்து பொருத்தமான உள்ளூர் சட்டங்களுக்கு முழுமையாக இணங்கும் வகையில் வழக்கமான அடிப்படையில் ஊதியங்கள் மற்றும் பிற நன்மைகள் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும், இது சட்டப்பூர்வமான நாணயத்திலும் ஊழியருக்கு சாதகமான முறையிலும் இருக்க வேண்டும். பகுதி கட்டணத்தை பொருட்களாக சலுகைகளாக வழங்கும் முறைக்கு ஐஎல்ஓ வாய்ப்பளிக்கிறது.

தங்கள் ஊழியர்கள் தொழிற்சாலை மற்றும் சமூக காப்பீட்டு சட்டங்கள் மற்றும் இதுபோன்ற பிற விதிமுறைகளுக்கு இணங்குவதற்காக தங்கள் கடமைகளை கடந்து போலியான தொழிற்பயிற்சி மற்றும் ஊழியரை துணை-ஒப்பந்தம் செய்வது போன்ற செயல்களில் டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் ஈடுபடாமல் இருப்பதை உறுதி செய்வார்கள்.

## 8. நியாயமான வேலை நேரங்கள்

வேலை நேரங்கள் தொடர்பான பொருத்தமான சட்டங்கள் மற்றும் தொழிற்சாலை தரநிலைகளுக்கு, டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்கள் உட்பட்டு இருக்க வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும் வாரத்திற்கு 48 மணிநேரத்திற்கு அதிகமாக ஊழியர் எவரும் தொடர்ந்து வேலைசெய்யக் கூடாது. ஒரு பணி வாரத்திற்கு குறைந்தது ஒரு நாளாவது விடுமுறை அளிக்கப்பட வேண்டும். டெயிச்மான் குழு ஐஎல்ஓ விதிவிலக்குகளை ஒப்புக்கொள்கிறது, இருந்தாலும் ஐஎல்ஓ-ஆல் முன் அமைக்கப்பட்ட சர்வதேச அடிப்படை நிபந்தனைகளுள் இருக்கும் வகையில் பொருத்தமான தேசிய சட்டங்கள் மற்றும் நிபந்தனைகள், ஒப்பீட்டு தொழிற்சாலை தரநிலைகள் அல்லது கூட்டு பேர ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

ஐஎல்ஒ-ஆல் முன் அமைக்கப்பட்ட விதிவிலக்குகளில், மேற்கூறிய எண்ணிக்கைக்கான வேலை நேரங்களின் அதிகபட்ச வரம்பு மீறப்படலாம், இதுபோன்ற நிலையில் கூடுதல் வேலைநேரம் தன்னார்வ அடிப்படையில் அனுமதிக்கப்படும். டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் ஊழியருடன் கூடுதல் வேலைநேரத்தை ஒப்புக்கொண்டால் (வழக்கமான வேலை வாரத்தை மீறும் மணிநேரங்கள்) சிறப்பான விகிதத்தில் பணம் செலுத்துவதை உறுதி செய்ய வேண்டும் இது சாதாரண விகிதத்தில் ஒன்றேகால் மடங்கிற்கு பங்கிற்கு குறைவாக இருக்கக் கூடாது. கூடுதல் வேலைநேரம் விதிவிலக்காக இருக்க வேண்டும் மேலும் தன்னார்வ அடிப்படையில் எப்பொழுதும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 9. கூட்டமைப்பு சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம்

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் தங்களுடைய ஊழியர்கள் தொழிலாளர் கூட்டமைப்பை அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப உருவாக்கி, அதில் இணைவதற்கும் கூட்டு பேரத்தில் ஈடுபடுவதற்குமான உரிமையை மதித்து நடக்க வேண்டும்.

கூட்டமைப்பு சுதந்திரம் மற்றும் கூட்டு பேரத்திற்கான உரிமை சட்டத்தால் தடை செய்யப்படும் சூழ்நிலைகளில், வேலை வழங்குபவருடன் வேலை-சார்ந்த விஷயங்களை சிக்கல் இல்லாமலும் தனிப்பட்ட முறையிலும் கலந்துரையாட டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் தங்களுடைய ஊழியர்களுக்கு எளிமையான வழிகளை வழங்க வேண்டும்.

வணிக சங்கத்தில் ஊழியர் உறுப்பினராக இருக்கும்பட்சத்தில் டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் ஊழியருக்கு எதிரான பாகுபாட்டையோ அல்லது தங்களுடைய வேலையிடத்தில் ஊழியர் பிரதிநிதிகளை அணுகுதல் அல்லது பேசுவதைத் தடைசெய்யவோ கூடாது..

## 10. உடல்நலம் மற்றும் பாதுகாப்பு

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் தங்களுடைய பிரிவு மற்றும் ஏதேனும் சிறப்பு ஆபத்துகள் இருந்தால் அதை தெரிந்திருப்பார்கள் என்ற அனுமானத்தில், பாதுகாப்பான மற்றும் சுத்தமான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைமுறை மற்றும் பணியிடச் சூழலை வழங்க வேண்டும். இதற்காக நிர்வாகத்திலிருந்து பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும், இவர் இந்த நடத்தை விதிமுறையின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளுடன் முழுமையாக இணங்கும் வகையில் ஒட்டுமொத்த ஊழியரின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்கு பொறுப்பாவார்.
தொழிற்சாலை விபத்துகள் அல்லது ஊழியர்கள் தங்களுடைய வேலையின்போது ஏற்படும் உடல்நல எதிர்மறை விளைவுகள் அல்லது அவர்களுடைய வேலையிலிருந்து உருவாகும் சிக்கல்கள் அல்லது வேலைச் சூழலில் ஆபத்து காரணங்களைக் குறைத்து தங்களுடைய வேலையில் இணைந்திருக்கும் எந்தவொரு சூழ்நிலையிலும் விபத்துகளைத் தடுக்க தேவையான மதிப்பீடுகளை டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் கட்டாயம் எடுக்க வேண்டும். வளரிளம் பருவ ஊழியர்கள், இளம் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணி பெண் மற்றும் ஊனமுற்றவர்கள் போன்ற பாதுகாப்பு தேவைப்படும் தனிநபர்கள் சிறப்பு பாதுகாப்பைப் பெறுவார்கள், இது இவர்கள் போன்றவர்களுக்கு மட்டும் வரம்புக்குட்பட்டதல்ல.

பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான வேலைச் சூழலை உத்திரவாதம் அளிக்கும் வகையிலான அமைப்புகளை செயல்படுத்துவதற்கு நிர்வாகம் மற்றும் ஊழியர் மற்றும்/அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கிடையே ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது. இது போன்ற ஒரு ஒத்துழைப்பு தொழிற்சாலை பாதுகாப்பு குழுக்கள் ஊழியர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக நிறுவப்பட்டுள்ள நடவடிக்கைகளைத் தீர்மானித்தல், மதிப்பிடல், தடைசெய்தல் மற்றும் சாத்தியமான ஆபத்துகளைப் போராடுதல் போன்றவற்றை இந்த அமைப்புகள் மேற்கொள்வதை நிறுவனங்கள்

உறுதி செய்ய வேண்டும். சாத்தியமுள்ள விபத்துகள், காயங்கள் மற்றும் தங்களுடைய வேலை நேரத்தின்போது அல்லது வேலையுடன் தொடர்புடைய நேரத்தில் ஏற்படும் நோய்கள் போன்றவற்றைத் தடுப்பதற்கான மதிப்பீடுகளையும் அவை எடுக்க வேண்டும். சரியான மற்றும் ஆவணமாக்கப்பட்ட உடல்நலம் மற்றும் பாதுகாப்பு பயிற்சியை ஊழியர் பெறுவதையும் மேலும் இந்த பயிற்சி புதிய மற்றும் மீண்டும்-வேலைக்கு சேர்க்கப்படும் ஊழியருக்கு வழங்கப்படுவதையும் டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகள் மற்றும் விநியோக சங்கிலியில் இருக்கும் துணை-ஒப்பந்ததாரர் கட்டாயம் உறுதி செய்ய வேண்டும்.

விபத்துகள் நடைபெறும்போது ஊழியரின் பாதுகாப்பை மேம்படுத்துவதர்கான ஒவ்வொரு நடவடிக்கையையும் டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் எடுக்க வேண்டும், உதாரணமாக கட்டாய காப்பீட்டு அமைப்புகள் வழியாக அவர்களுடைய செல்வாக்கு வட்டத்தில், ஊழியரின் குடியிருப்பு பகுதிகள் உள்ளிட்ட தங்களால் பயன்படுத்தப்பட்ட தாவரங்கள் மற்றும் கட்டிடங்களில், வேலை வழங்குபவரால் வழங்கப்பட்டிருந்தால், நிலையான மற்றும் பாதுகாப்பான மற்றும் முன்னறியக்கூடிய அவசரநிலை ஏதேனும் வந்தால் தவிர்ப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுக்க வேண்டும். உடனடி ஆபத்து காரணமாக நிறுவனத்தின் வளாகத்தில் இருந்து வெளியேறுவது அவசியம் என்றால் எந்தவித அனுமதியும் பெறாமல் வெளியேறுவதற்கு பணியாளர்களுக்கு உள்ள உரிமையை டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ளள துணை-ஒப்பந்தக்காரர்களும் மதிக்க வேண்டும்.

வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் பொருத்தமான நிலையில் தொழிற்சாலை மருத்துவப் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய வசதிகளை வழங்க வேண்டும்.

சுத்தமான குடிநீர், பாதுகாப்பான மற்றும் சுத்தமான உணவருந்தும் இடம் மற்றும் ஓய்வறைகள் மற்றும் உணவைத் தயாரிக்க மற்றும் சேமிக்க பாதுகாப்பான மற்றும் சுத்தமான இடங்கள் போன்றவற்றை டெயிச்மான் வணிக பங்குதாரர்கள் மற்றும் விநியோக சங்கிலியில் இருக்கும் துணை-ஒப்பந்ததாரர் உறுதி செய்ய வேண்டும். தங்கள் ஊழியர்களுக்கு அனைத்து நேரங்களிலும் இலவச மற்றும் சிறந்த தனிநபர் பாதுகாப்பு உபகரணத்தை வழங்க வேண்டும் (பிபியி).

தங்கும் அறைகள், ஊழியருக்கு கிடைக்கும் வகையில் வழங்கப்பட்டிருந்தால் அவையும், கழிப்பறைகள் மற்றும் கழுவும் வசதிகள் போன்றவை அடிப்படைத் தேவைகளை எதிர்கொள்ள பாதுகாப்பாகவும் சுத்தமாகவும் இருப்பதை டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் உறுதி செய்ய வேண்டும்.

## 11. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

தங்களிடம் முக்கியமான சுற்றுச்சூழல் பாதிப்பு ஏதேனும் உள்ளதா என்பதற்காக தங்களுடைய நடவடிக்கைகளை டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் சோதிக்க வேண்டும் மேலும் சுற்றுச்சுழலில் தங்களுடைய பொறுப்பைப் பிரதிபலிக்கும் வகையில் சிறந்த வழிகாட்டுதல்களைத் தீர்மானிக்க வேண்டும். முடிந்தளவுக்கு இயற்கை மூலங்கள் பயன்படுத்தப்படிருப்பதை உறுதி செய்ய வேண்டும். தங்கள் நிறுவனம் செயல்படும் நாட்டின் பொருத்தமான விதிகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான விதிமுறைகளுடன் இணங்கியும் இருக்க வேண்டும்.

சமூகம், இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுசூழலில் மொத்தமாக ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கான சரியான அளவீட்டு நடைமுறைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதை டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் உறுதி செய்ய வேண்டும். எங்கெல்லாம் சாத்தியமோ, ஆபத்தான மூலப்பொருட்கள் தவிர்க்கப்பட வேண்டும் அல்லது குறைந்தளவு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அவைச் சுற்றுச்சூழலை பாதிக்கவி-

ல்லை என்றால் மட்டுமே சரியாகப் பயன்படுத்த-லாம்.
சுற்றுசூழலுக்கு இணங்கும் வகையில் கழிவு மற்றும் கொள்கலன்கள் அகற்றும் இருப்பதை உத்திரவாதமளிக்க வேண்டும் மேலும் கோரி-க்கையின்போது நிரூபிக்க வேண்டும். உற்பத்தி-யின்போது ஏற்படும் கழிவு அனைத்தும் சரியான வழியில் அகற்றப்பட வேண்டும்.

## 12. நெறிமுறைசார் வர்த்தகம்

உத்திரவாதமளித்தல், வழங்குதல் அல்லது மு-றையற்ற வகையில் பணம் வழங்குதல் அல்லது பிற ஊக்கத்தொகை போன்றவற்றுடன் இல்லா-மல், ஊழல், பணம் பறித்தல் அல்லது கையாடல் அல்லது எந்த வகையான கொள்ளை நடவடி-க்கையிலும் டெயிச்மான் வர்த்தக கூட்டாளி-களும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் ஈடுபடாமல் இருக்க உறுதியளிக்கிறார்கள்.

தங்களுடைய நடவடிக்கைகள், கட்டமைப்பு மற்றும் செயல்திறன் பற்றிய சரியான தகவ-லையும், பொருத்தமான விதிகள் மற்றும் ஒப்பீ-ட்டு தொழிற்சாலை நடைமுறைகளுடன் இணங்கி வெளியிடுவதையும் டெயிச்மான் வர்த்தக கூ-ட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் செய்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இதுபோன்ற தகவலைப் பொய்யாக சொல்லாம-லும் விநியோக சங்கிலியில் எந்தவித மோச-டியிலும் டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் பங்கேற்கக் கூடாது. அவர்க-ளும் தனிப்பட்ட தரவை சேகரித்து, பயன்படுத்தி பாதுகாக்க வேண்டும் (ஊழியர், வர்த்தக கூட்டா-ளிகள், வாடிக்கையாளர்கள் மற்றும் விநியோ-கஸ்தர்கள் தொடர்பான தரவு உள்ளிட்டவை) இவற்றை சிறந்த பாதுகாப்புடனும் தனியுரிமை மற்றும் தகவல் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்கும் வகையில் மே-ற்கொள்ள வேண்டும்.

## 13. நிர்வாக அமைப்புகள்

இங்கே கூறியுள்ள தேவைகளை நிறைவு செ-ய்யவும், தங்களுடைய வணிக செயல்முறைக-ள் அனைத்திலும் ஒருங்கிணைக்கவும் மேலும் தங்களுடைய நிறுவனக் கொள்கை மற்றும் தத்துவத்தில் ஒரு பகுதியாக மாற்றுவதற்கான டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்த-க்காரர்களும் தெளிவான நடவடிக்கைகளை மே-ற்கொள்ள வேண்டும்.

தங்களுடைய நிறுவனத்திற்குள் நிகழும் டெ-யிச்மான் நடத்தை விதிமுறைக்கு உட்பட்ட அனைத்து விஷயங்களுக்கும் பொறுப்பேற்கு-ம் வகையில் மேலாளர் ஒருவரை டெயிச்மா-ன் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் நியமிக்க வேண்டும்.

டெயிச்மான் நடத்தை விதிமுறைகளில் மே-ற்கூறிய தரநிலைகள் நடைமுறைப்படுத்தப்படு-கிறதா என்பது பற்றிய சோதனையை டெயிச்மா-ன் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களு-ம் நிர்வாகக் குழுக்கள் அடிக்கடி மேற்கொள்ள வேண்டும்.

தங்களுடைய மேற்பார்வை மற்றும் ஒப்புத-லின் கீழ் இருக்கும் ஊழியர்கள் அனைவரும் டெயிச்மான் நடத்தை விதிமுறையில் மே-ற்கூறிய தரநிலைகள் நிறைவேற்றப்படுவதற்கு டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்த-க்காரர்களும் பொறுப்பாவார்கள்

- டெயிச்மான் தாங்களுக்கு சொந்தமான அல்லது தாங்கள் நிர்வகிக்கும் ஒவ்வொரு தளங்களிலும் டெயிச்மான் நடத்தை விதி-முறையை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை ஒருவருக்கு ஒப்படைத்தல்.

- டெயிச்மான் நடத்தை விதிமுறைகளில் வழடெயிச்மான் நடத்தை விதிமுறையின் உட்பொருளை பணியாளர்கள் புரிந்து கொ-ள்ளக்கூடிய மொழியில் வழங்குவதன் மூ-

லமாகவும் மேலும் டெயிச்மான் நடத்தை விதிமுறை குறித்து அடிக்கடி பயிற்சிகள் நடத்துவதன் மூலமாகவும் அனைத்து பணி-யாளர்களும் இதை அறிந்து கொள்வதை உறுதி செய்தல்;

- டெயிச்மான் நடத்தை விதிமுறையுடன் இண-ங்குதல் பற்றி தகவலை வழங்கும் ஊழியரு-க்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க அல்லது வேலையை விட்டுநீக்க அல்லது வேறுபடு-த்தாமல் இருத்தல்.

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்த-க்காரர்களும் டெயிச்மான் நடத்தை தரநிலைகள் மேற்கொள்வதை ஆவணப்படுத்தல் மூலம் நி-ரூபிக்க வேண்டும். அவர்கள் இதுபோன்ற ஆவ-ணங்களுக்கான அணுகலை வழங்க வேண்டும் மேலும் தரநிலைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய டெயிச்மான் குழுவால் நியமிக்க-ப்பட்ட தரப்பினருக்கு இதுபோன்ற தகவல் கி-டைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

துணை-ஒப்பந்தக்காரர்களுடன் செய்யப்படு-ம் அனைத்து ஒப்பந்தங்களிலும் டெயிச்மான் நடத்தை விதிமுறையுடன் இணங்குமாறு டெயி-ச்மான் வர்த்தக கூட்டாளிகள் மற்றும் விநியோக சங்கிலியில் இருக்கும் துணை-ஒப்பந்ததாரர்க-ளை உறுதி செய்ய வேண்டும் வேண்டும். இந்த ஆவணங்கள் டெயிச்மான் நடத்தை விதிமுறை-யில் மேற்கூறிய தரநிலைகள் அனைத்தையு-ம் துணை-ஒப்பந்தக்காரர் அனைவரும் ஏற்று-க்கொள்ள வேண்டும் (இந்த பிரிவையும் சேர்த்து) மற்றும் கோரிக்கையின்போது விநியோகஸ்தரி-ன் தணிக்கையிலும் பங்கேற்க வேண்டும்.

## 14. தணிக்கைகள் மற்றும் கண்காணிப்புகள்

டெயிச்மான் நடத்தையுடன் இணங்குவதை உறுதி செய்ய, டெயிச்மான் குழுவின் சார்பாக சமூக மற்றும் சுற்றுச்சூழல் தணிக்கைகளை மேற்கொள்ள தனிப்பட்ட தணிக்கையாளர்க-ளை டெயிச்மான் குழு பயன்படுத்தும். பல்வேறு டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகள் வேறுபட்ட நடைமுறைப்படுத்தல் நிலைகளுக்கு உட்பட்டவ-ர்கள், இது விநியோக சங்கிலியில் அவர்களின் பங்கைப் பொறுத்தது.
இந்த நடத்தை விதிமுறை பின்பற்றப்படுவ-தை முறையான, முன்னறிவிப்பற்ற ஆய்வுகள் மூலமாக கண்காணிக்கும் உரிமை டெயிச்மான் குழுமமான எங்களுக்கு உள்ளது. இந்த ஆய்வுக-ள் வணிக சமூக இணக்க முயற்சி (பிஎஸ்சிஐ) வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப டெயிச்மான் குழுமம் அல்லது சுதந்திரமான தணிக்கையாளர்கள் மூலமாக செய்யப்படும்.

## 15. சரிசெய்தல் நடவடிக்கை மற்றும் இணங்காமை

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்ப-ந்தக்காரர்களும் நிறைவேற்ற எதிர்பார்க்கக் கூடிய கொள்கைகள் சில டெயிச்மான் நடத்தை விதி-முறைகளில் அமைக்கபட்டுள்ளன.

இதுபோன்ற சில எதிர்பார்ப்புகளை எல்லாரும் அடைய முடியாது என்று எங்களுக்குத் தெரியும். டெயிச்மான் குழுவிற்கு, இணங்காமை என்று வரும்போது இது முக்கியமானது, சூழ்நிலை-யை மேம்படுத்த மற்றும் இந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்பந்தக்காரர்களும் தேவையான செயல்முறைகளை எடுப்பார்கள். இது எவ்வளவு காலம் அனுமதிக்கப்படும் என்பது மேற்கொள்ள-ப்படும் சரிசெய்தல் நடவடிக்கை மற்றும் ஆபத்தி-ன் அளவைப் பொறுத்தது மேலும் டெயிச்மான் குழுவில் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

டெயிச்மான் வர்த்தக கூட்டாளிகளும் மற்றும் விநியோக சங்கிலியில் உள்ள துணை-ஒப்ப-ந்தக்காரர்களும் சரிசெய்தல் நடவடிக்கையை எடுக்கும்போது நடத்தை விதிமுறைகள் தொட-ர்ச்சியாக மீறப்பட்டால், ஒத்துழைப்பை முடித்துக் கொள்வது பற்றிய கட்டாயம் ஏற்படும்.